# சனிப்பெயர்ச்சி பலன்கள்

## 2025 – 2028



திருக்கணித பஞ்சாங்கத்தின் அடிப்படையில்

**29.03.2025 முதல் 23.02.2028 வரை**



## சனிப்பெயர்ச்சி எப்போது ?

மங்களகரமான குரோதி வருடம் திருக்கணித பஞ்சாங்கத்தின் அடிப்படையில் பங்குனி மாதம் 15ஆம் (29.03.2025) தேதியன்று இயற்கை அசுபரான சனிதேவர், பூரட்டாதி மூன்றாம் பாத நட்சத்திரத்தில் இருந்து பூரட்டாதி நான்காம் பாத நட்சத்திரமான மீன ராசிக்கு அதாவது, சனிக்கிழமையில் கும்ப ராசியில் இருந்து மீன ராசிக்கு சஞ்சாரம் செய்கிறார்.

### சனியின் பார்வை படும் ராசிகள்


நவகிரகத்தில் அவரவர் கர்மவினைக்கு ஏற்ப தன் சுப மற்றும் அசுப பலன்களை அளிக்கக்கூடியவரான சனிதேவர், தான் நின்ற ராசியில் இருந்து மூன்றாம் பார்வையாக ரிஷப ராசியையும், ஏழாம் பார்வையாக கன்னி ராசியையும், பத்தாம் பார்வையாக தனுசு ராசியையும் பார்க்க இருக்கின்றார்.

# சனிப்பெயர்ச்சி பலன்கள்

# 2025-2028

## மேஷம்






**சனி பார்வை இடும் இடங்கள்**

| 3ம் பார்வை | 7ம் பார்வை | 10ம் பார்வை |
|---|---|---|
| குடும்ப ஸ்தானம் | சத்ரு ஸ்தானம் | பாக்கிய ஸ்தானம் |

மேஷ ராசிக்கு பதினொன்றாம் இடத்தில் இருந்துவந்த சனி பகவான் பெயர்ச்சி அடைந்து பனிரெண்டாம் இடமான போக ஸ்தானத்திற்கு பெயர்ச்சி அடைகின்றார்.

சனி தான் நின்ற ராசியிலிருந்து மூன்றாம் பார்வையாக ரிஷப ராசியான குடும்ப ஸ்தானத்தையும், ஏழாம் பார்வையாக கன்னி ராசியான சத்ரு ஸ்தானத்தையும், பத்தாம் பார்வையாக தனுசு ராசியான பாக்கிய ஸ்தானத்தையும் பார்வையிட இருக்கின்றார்.

சனி தன்னுடைய மூன்றாம் பார்வையாக குடும்ப ஸ்தானத்தை பார்ப்பதினால் பேச்சுகளில் அனுபவ அறிவு வெளிப்படும். கணவன்-மனைவிக்குள் இருந்த மனக்கசப்புகள் நீங்கும். சொத்துக்கள் விற்பனையில் இருந்துவந்த தாமதங்கள் மறையும். அரசு செயல்களில் அலைச்சலுக்கு பின் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பொருளாதார விஷயங்களில் சிந்தித்து செயல்படவும். காலம் தவறி உணவு உட்கொள்வதை தவிர்ப்பது நல்லது.

சனி தன்னுடைய ஏழாம் பார்வையாக கன்னி ராசியான சத்ரு ஸ்தானத்தை பார்ப்பதினால் நெருக்கடியாக இருந்துவந்த பிரச்சனைகள் ஓரளவு குறையும். முக்கியமான கோப்புகளில் கவனம் வேண்டும். உடல் ஆரோக்கியத்தில் சற்று விழிப்புணர்வுடன் இருக்கவும். எடுத்துச் செல்லும் உடைமைகளில் கவனம் வேண்டும். பலதரப்பட்ட மக்களின் நட்பும், ஆதரவும்


# சனிப்பெயர்ச்சி பலன்கள்

# 2025-2028



## ரிஷபம்






சனி பார்வை இடும் இடங்கள்

| 3ம் பார்வை | 7ம் பார்வை | 10ம் பார்வை |
|---|---|---|
| ராசி ஸ்தானம் | புத்திர ஸ்தானம் | அஷ்டம ஸ்தானம் |

ரிஷப ராசிக்கு பத்தாம் இடத்தில் இருந்துவந்த சனி பகவான் பெயர்ச்சி அடைந்து பதினொன்றாம் இடமான லாப ஸ்தானத்திற்கு பெயர்ச்சி அடைகின்றார்.

சனி தான் நின்ற ராசியிலிருந்து மூன்றாம் பார்வையாக ரிஷப ராசியான ராசி ஸ்தானத்தையும், ஏழாம் பார்வையாக கன்னி ராசியான புத்திர ஸ்தானத்தையும், பத்தாம் பார்வையாக தனுசு ராசியான அஷ்டம ஸ்தானத்தையும் பார்வையிட இருக்கின்றார்.

சனி தன்னுடைய மூன்றாம் பார்வையாக ராசி ஸ்தானத்தை பார்ப்பதினால் எதிர்பாராத சில நிகழ்வுகள் மூலம் மனதளவில் புதிய பக்குவம் பிறக்கும். நினைத்த சில காரியங்களில் அலைச்சலுக்கு பின்பு முடிவு கிடைக்கப் பெறும். நிலைத்தன்மை குறித்த எண்ணங்களும் அதற்கான முயற்சிகளும் அதிகரிக்கும். பழைய நிகழ்வுகளால் மனதில் சஞ்சலங்கள் அதிகரிக்கும். மனம் விட்டு பேசுவதன் மூலம் மனதில் அமைதி பிறக்கும். சில இடங்களில் பொறுமையை கையாள்வது தெளிவையும், செல்வாக்கையும் மேம்படுத்தும்.

சனி தன்னுடைய ஏழாம் பார்வையாக கன்னி ராசியான புத்திர ஸ்தானத்தை பார்ப்பதினால் எதிர்பாராத சில உதவிகள் மூலம் மாற்றங்கள் உண்டாகும். பூர்வீக சொத்து விஷயங்களில் பொறுமையுடன் செயல்படவும். ரசனைத் தன்மையில் சில மாற்றங்கள்


# சனிப்பெயர்ச்சி பலன்கள்

# 2025-2028



## மிதுனம்






மிதுன ராசிக்கு பாக்கிய ஸ்தானத்தில் இருந்துவந்த சனி பகவான் பெயர்ச்சி அடைந்து பத்தாம் இடமான கர்ம ஸ்தானத்திற்கு பெயர்ச்சி அடைகின்றார்.

சனி தான் நின்ற ராசியிலிருந்து மூன்றாம் பார்வையாக ரிஷப ராசியான அயன சயன ஸ்தானத்தையும், ஏழாம் பார்வையாக கன்னி ராசியான சுக ஸ்தானத்தையும், பத்தாம் பார்வையாக தனுசு ராசியான களத்திர ஸ்தானத்தையும் பார்வையிட இருக்கின்றார்.

சனி தன்னுடைய மூன்றாம் பார்வையாக அயன சயன ஸ்தானத்தை பார்ப்பதினால் பயணங்களால் ஒருவிதமான சோர்வு உண்டாகும். ரகசியமான செயல்களில் பொறுமையை கடைபிடிப்பது நல்லது. சிகை அலங்காரம் தொழிலில் இருப்பவர்களுக்கு மாற்றமான சூழல் உண்டாகும். கொடுக்கல், வாங்கல் விஷயங்களில் நபர்களின் தன்மைகளை அறிந்து ஆலோசனை பெற்று மேற்கொள்வது தேவையற்ற பிரச்சனைகளை குறைக்கும். நினைத்த சில பணிகளில் எதிர்பார்த்த முடிவுகள் கிடைப்பதில் தாமதம் உண்டாகும். இனம் புரியாத சில சிந்தனைகளால் தாழ்வு மனப்பான்மை அவ்வபோது தோன்றி மறையும்.